ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

இஹலோகத்தில் அனுபவிக்கப்படுவதுதான் புருஷார்த்தம், அதற்கு உபயோகப்படுகின்றவைகள்தான் ஸாதனங்கள். மற்ற லோகாந்தரம் கிடையாது. அதற்குரிய அதிருஷ்டஸாதனங்களுமில்லை. அந்தலோகாந்தரத்திற்கும் அதிருஷ்டத்திற்கும் ஸாத்தியஸாதனத்தன்மையைப்போதிக்கும் பிரமாணங்களுமில்லை. இவ்வளவுக்கும் நியந்தாவான பரமேச்வரனுமில்லையென்று ஆஸ்திகர்கள் வாதிக்கமுடியாது. நாஸ்திகர்களும் பிரத்தியக்ஷமொன்றையே பிரமாணமாக நம்பியவர்களாதல்பற்றி சந்திரஸூர்ய மண்டலாதிகளில் நேரிட அழைத்துப்போய் பிரத்தியக்ஷமாக ஒன்றுமில்லை என்று காண்பிவிக்காதவரையில் பரலோகாதிகளில்லையென்று வாதிக்க முடியாது. இவ்வுலகத்திலேயே பரோக்ஷமாகக் கிடக்கின்ற அனேக பதார்த்தங்களை பிரத்தியக்ஷமொன்றைக்கொண்டே அறிந்துவிடமுடியாதாகையால் பிரத்தியக்ஷத்தைத்தவிர வேறு பிரமாணங்களும் அங்கீகரிக்க வேண்டியதவசியம். பிராணிகளும் கீழ்நடந்ததை உதாஹரணமாகக் கொண்டுவருங்காலத்து ஆஹாரவியவஹாராதிகளை நடத்திக்கொள்கிறார்கள். மறைந்தும் வெகுதூரம் விலகியுமிருக்கின்றவைகளை லௌகிக சப்தங்களால் தெரிந்துகொள்ளுவதைப்போலவே வைதிகசப்தங்களால் லோகாந்தரங்களையும் அதற்குரிய ஸாதனங்களையும் தெரிந்துகொண்டு அச்சாதனங்களையனுஷ்டித்து அந்த லோகாந்தரப்பயனைப் பெறவிரும்புகிறார்கள். அந்த லோகாந்தரங்களைப் போதிக்கின்ற மதநூல்கள் ஒன்றற்கொன்று முரண்படாமலிருக்குமாயின் அவைகள் யாவும் ஸரியான பிரமாணங்களே. ஒன்றற்கொன்று விரோதிக்குமாயின் பிரபலப்பிரமாணங்களை அனுசரித்து, துர்லபப்பிரமாணங்களுக்கு பொருள்படுத்திக்கொள்ள வேண்டும். ஸமமான பலமுள்ளவைகளானால், ஆங்கு அதிகாரிக்குத்தக்கவாறு வியவஸ்தை ஏற்படுத்தப்பட்டபடி அந்தந்த அதிகாரிக்கு அதது பிரமாணமெனக் கொள்ளவேண்டும். ஆகவே மதாந்தரஸ்தர்கள் அவரவர்களது மதநூல்களை நம்பி அதன்படி நடந்துவரவேணுமென்று அவர்கள் மதாசாரியன் உபதேசித்தபடி நடப்பது போலவேதான் வைதிகர்களும் தங்களுக்குப்பிரமாணமென்று அநாதிகாலமாக வந்த வேதத்தையே நம்பி மதாசாரியாள் உபதேசிக்கிறபடி நடந்துவருகிறார்கள். அப்படியில்லாமல் சிலர் வைதிகரைப்பற்றி ஹேளனமாகவும் அவதூறாயும் பேசுவது நியாயமானதாகாது. மற்றவர்வழியையே வைதிகரும் ஆசிரயிக்கவேண்டுமென்று பலாத்காரப்படுத்துவதும் தகாதகாரியம். ஆகையால் ஒருவரையொருவர் தூஷிக்காமல் அவரவர் மதாசாரப்படி நடந்துகொள்வார்களாக.

சுபம். பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

சுக்ல-௵ மார்கழி-௴ ௫௳

கிருதயுகவிவாஹம்.

தற்காலத்தில் சிலர் முன்காலங்களிலும் பிரௌடாவிவாஹமே நடத்தப்பட்டு வந்ததென்றும், அது மஹம்மதீயர்களுடைய தீய தொழிலால் பயந்து நிறுத்தப்பட்டு பாலிகாவிவாஹம் செய்ய நேரிட்டதென்றும், அதே பிரௌடாவிவாஹம் சாரதாசட்டத்தால் நடப்புக்குவந்துவிடுமாயின் விட்டுப்போன ஸநாதனதர்மமே கைப்பற்றப்பட்டதாகுமென்றும், ஆகவே வைதிகர் சாரதாசட்டத்தைக்கேட்டு எதற்காகக் கூச்சலிடுகின்றனரென்றும் பத்திரிகைகளில்எழுதிவருகிறார்கள். பூர்வயுகத்தில் பிரௌடாவிவாஹம் நடந்ததென்பதற்குப் பிரமாணம் யாதோ? இப்பொழுது வியவஹரிக்கப்பட்டுவருகின்ற சுருதி முதலிய பிரமாணங்களே பூர்வகாலத்தில் பிரௌடாவிவாஹம் நடந்ததற்குப் பிரமாணங்களா? அல்லது வேறுபட்டதா? வைதிகர்களிடம் அதை ஸ்தாபிக்கக் கூறும் பிரமாணம் வைதிகர்களால் அங்கீகரிக்கப்பட்டதாயிருக்கவேண்டுமேயன்றி மற்றதைக்கூறுவதில் பிரயோஜனமில்லை. இதே சுருதிஸ்மிருதிகளென்றால் அது கூறமுடியாது. இந்த சுருதி முதலியவைகள் பாலிகா விவாஹத்தையே முக்கிய தர்மமாகக் கூறுகின்றனவேயன்றி பிரௌடா விவாஹத்தைக் கூறவில்லை. இதைப்பற்றி பெரிய விசாரம் செய்து வேதாந்தகேஸரி மஹாமஹோபாத்தியாய ப. கணபதிசாஸ்திரிகளவர்கள் "வயோநிர்ணயம்" என்ற கிரந்தத்தில் பாலிகா விவாஹத்தையே ஸ்தாபித்திருக்கிறார்கள். அனேக பண்டிதபரிஷத்துக்களிலும் அப்படியே வியஸ்வதைசெய்யப்பட்டு வருகின்றது. இதில் வேறு சிலருக்கு வேறொரு சங்கையிருக்கிறது. அதாவது இப்பொழுது வைதிகரெனப்படுவோர் வேதத்தை அத்தியயனம் செய்யவேயில்லை. ஒருவாறு மூலத்தை மாத்திரம் அத்தியயனம் செய்துவிட்டாலும் ஒரு வைதிகராவது அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளவேயில்லை என்று இப்படி

சங்கைப்படுவோர் எவ்வளவு வேதத்தை அத்யயனம் செய்தாரோ எங்கு குருகுலவாஸம் இருந்தாரோ? எந்த குருவினிடம் அர்த்த விசாரம் செய்து தெரிந்துகொண்டாரோ? இவர் கண்ணில் பட்டவர் தான் வைதிகவுலகம் பூராவும் என்று நினைத்துவிட்டார்போலும். இந்தக் கடோரமான கலியிலும் துவிவேதியென்றும், திரிவேதியென்றும், இரண்டு மூன்று வேதங்களை ஸாங்கோபாங்கமாக அத்யயனம் செய்த மஹான்கள் எவ்வளவோ பேர்களிருப்பது வைதிக கோஷ்டியில் வந்தாலல்லவா இவர்களுக்குத் தெரியும் தன் வீட்டுவாசலில் பேடிக்காகக் காத்திருக்கும் எவரையோ பார்த்து விட்டுச்சொல்லுவதனால் அந்த மஹான்கள் இல்லாமற் போய்விடமாட்டார்கள். உபப்பிரம்மங்களாகிய புராண, நியாய, மீமாம்ஸா, தர்மசாஸ்திராதிகளைக் குருமுகமாகப் படித்து வேதார்த்தத்தை நன்றாய் வர்ணிக்கும் பண்டிதாளைக் கனவிலும் இவர்கள் பார்த்திரார்கள் போலும். அந்தப்பண்டித மணிகளெல்லாம்வேதப்பிரமாண மூலமாக கிருதாதியுகங்களிலும் பாலிகா விவாஹம் தான் நடந்ததாகக் கூறுகின்றார்களேயன்றி இவர்கள் சொல்லுவது போல் சொல்லவில்லை. மஹம்மதியர்களுக்குப்பயந்துபாலிகா விவாஹந்தொடங்கியதாகக் கூறுவது எந்தப் பிரமாணத்தைக் கொண்டோ தெரியவில்லை. சரித்திரஆராய்ச்சி சரியான பிரமாணமாகாது. எந்த பயத்திற்காக பாலிகா விவாஹம் தொடங்கியதாக கூறுகின்றார்களோ! அந்த பயம் இப்பொழுது விலகிவிட்டதா? அன்றைக்குப் பயமுறுத்தினவர் எங்கே போய்விட்டார்? அல்லது அபயதானம் செய்துவிட்டாரா? வீணாக ஒருவர்மீது பழி சுமத்தித் தோன்றியபடி பேசுவது பிராமாணிகர்கட்கழகில்லை. ஆகையால் எக்காரணத்தை முன்னிட்டும் வைதிகர் குடும்பத்திற் எக்காலத்திலும் பிரௌடாவிவாஹம் தொடங்கவில்லை. ஆகையால் அது ஸனாதன தர்மமுமாகாது. இதற்காகத்தான் வைதிகர் கூச்சலிடுகிறார்.

சுபம்!

பத்திராதிபர்.

விவாஹமசோதாவும் நமது கடமையும்.

தற்காலம் பிராமணர்களுக்கு நேர்ந்திருக்கும் பெரிய ஆபத்துக்களில் சாரதா மசோதா முடிவான சோதனையாகும். உலகத்தில் தோன்றியுள்ள ஸகல மதங்களுக்கும் ஆரம்பம் இந்த வருடமென்று வரையறுத்திருக்கிறார்கள். எல்லா ஆராய்ச்சிக்காரர்களும் தர்மசாஸ்திரம், புராணம் முதலிய எல்லாவற்றிற்கும் ஆதாரமான வேதம், பிரபஞ்ச சிருஷ்டி ஆகிய இவ்விரண்டும் ஒரே காலத்தில் ஆரம்பம் என்று கூறிவருகிறார்கள்.

இந்தியர்கள் ஆதிமுதல் அரசனைத் தலைவனாக்கொண்டு, சத்தியம் தவறாமல் சுமார் 800-வருஷங்களுக்குமுன் வரையில் நடந்துவந்த மாதிரியே காலவித்யாசத்தால் க்ஷத்திரிய வம்ச ராஜாங்கம் நசித்தும், இதர மதஸ்தர்களையாவது தங்களுக்கு அரசன் என்று நினைத்து அவர்கள் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு தங்கள் தர்மத்தை கைநழுவவிடாது அவர்களையும் வெளிப்படையில் லௌகீக விஷயங்களில் அனுசரித்து வைதீக தர்மத்தை நாளது வரையில் காப்பாற்றிவந்திருக்கிறார்கள். அப்படி இராவிடில் ஹைதர், திப்பு, ஔரங்கசீப், முதலிய கொடுங்கோல் மன்னர்களுடைய அரசாக்ஷியிலிருந்து இந்த மதத்தை நாளதுவரையில் எப்படி நீடித்திருக்கச் செய்யமுடியும்? மொத்தத்தில் ஹிந்து மதமானது பிரசித்திபெற்ற மூன்று மதாசாரியர்களை ஆதாரமாகக் கொண்டு பிரகாசித்துவருகிறது.

எப்படிப்பட்ட ஹிந்துவும் ஒருவிதத்திலாவது இந்த மஹான்களை அனுசரிக்காமலிருப்பதில்லை என்பது ஸகலரும் அறிந்ததேயாகும். இவர்களின் உட்பிரிவு அனேகமிருப்பினும் அதைப்பற்றி நாம் விசாரிக்கவில்லை. ஆகையால் தன்னை ஹிந்துவென்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு ஹிந்துவும் தங்கள் முன்னோர்கள் அனுஷ்டித்த இந்த மூன்று மஹான்களின் உட்பிரிவான பீடாதிபதிகளுக்கு ஸகல வைதீக கர்மானுஷ்டானங்களில் கட்டுப்பட்டவர்கள் என்பது நிச்சயம்.

நிற்க, ஸமீபத்தில் நடந்த மஹாயுத்தத்திற்குப்பிறகு காருண்ய கவர்மெண்டார் நமக்கு ஸ்வயராஜ்யம் கொடுப்பதற்கு, பரீக்ஷார்த்தமாக சட்டசபையையும் அதன் மெம்பர்களை ஓட்மூலமாக நாமே தெரிந்தெடுத்து, அவர்களைக்கொண்டு நமக்கு அனுகூலமானவை

களைச் சட்டசபையில் பாஸ்செய்து சட்டமாக்கிக்கொண்டு அதன் பலன்களை அனுபவித்து நாம் ஒற்றுமையாயும் சௌக்கியமாயும் வாழ்ந்து வந்தால் இன்னும் விசேஷ உரிமைகளைக்கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார்கள். இந்தியாவில் சிலவருஷங்களாககலியின் கொடுமையால் பிராம்மணத்வேஷம் அதிகரித்து வந்து முடிவில் புராணம், தர்மசாஸ்திரம், வேதம் முதலியவைகள் பொய் என்றும் கட்டுக்கதைகள் என்றும், சொல்லி ஜஸ்டிஸ் சுயமரியாதை கக்ஷிக்காரர்கள் புராணம், தர்மசாஸ்திரம், வேதம் முதலியவைகளை கொளுத்தியும், ஆலயங்களை இடிக்கவேண்டுமென்றும் ஆங்காங்கு தீவிர பிரசாரம் புரிந்து வருகிறார்கள்.

வேத பாஹ்யர்களான முஹம்மதியர்கள் மதவெறிகொண்டு ஹிந்து ஆலயங்களை இடித்து தகர்த்தார்களாயினும் நாளது வரையில் அனேக ஆலயங்கள் பிரகாசித்து வருகின்றன. ஹிந்துவென்று வெட்கமில்லாமல் தன்னைச்சொல்லிக்கொண்டு தன் முன்னோர்களால் பூரா சில்பசாஸ்திரம் அமையப்பெற்ற அழகு வாய்ந்த ஆலயங்களையும் தன்னுடைய பிறப்பு, புத்தி முதலிய சகலத்துக்கும் ஆதாரமாக இருக்கும் வேதம் முதலான சாஸ்திரங்களையும் அழிப்பது என்ன அறிவீனமான செய்கை?

இந்தப் பிரபுக்களின் பேச்சில் மயங்கித்தரித்திரன் கொடுமையால் ஆலயங்களை இடிக்க முன்வரும் சிலர் தங்களுக்கு கூலியார் கொடுப்பது அல்லது ஏதாவது பிரயோஜனம் கிடைக்குமா? உத்யோகத்தைக் கொடுப்பதற்கு யாராவது தடுக்கப்போகிறார்களா? என்று இம்மாதிரியான விஷயங்களைப்பற்றி யோசிப்பதில்லை. சில பிரபுக்கள் தற்காலம் பிராமணர்களை பலவிதத்திலும் ஹிம்சித்து வருவதுமன்னியில் வைதிகதர்மங்களிலும் ராஜாங்க உதவியைக் கொண்டு வேருடன் களையக்கூடிய ஆபத்தை, இந்த மசோதாமூலமாக கொண்டுவந்து சட்டமாக்கி உபத்திரவிக்க முடிவு செய்துவிட்டார்கள். இந்த மசோதாவால் ஆஸ்திக வைதீக பிராமணர்களுக்கும், விவாஹ விஷயத்தில் பிராமணர்களை அனுசரிக்கும் பிராமணோத்தமர்களுக்கும் ஆபத்தே தவிர மற்றவர்களுக்கு அநுகூலமாவது பிரதிகூலமாவது கிடையாதென்பது நிச்சயம். "ஆடு நனைகிறதே என்று ஓநாய்க்குட்டி அழுவதுபோல" இருக்கிறது. இவர்கள் கருணை.

காலவித்தியாசத்தால் சில பிராமணர்களும் இந்த மசோதா வுக்கு ஆதரவளித்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. 1858-வருஷம் ஈஸ்ட் இந்தியா கம்பெனியிலிருந்து மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மஹாராணியவர்கள் ராஜ்யபாரத்தைக்கைக்கொண்டபோது இந்தியா நெடுங்காலமாக அனுஷ்டியான வைதீக மதவைராக்யம் கொண்ட தேசமானதால் சிறுபிரிவினரான எந்த ஹிந்துவும் தங்கள் மதத்தை இஷ்டப்படி அனுஷ்டிக்கலாம் என்றும் ஹிந்துக்களின் மதவிஷயங்களில் தன் கவர்மெண்டாராவது தானவது பிரவேசிப்பதில்லையென்றும் பிரகடனப் பத்திரிகை அளித்திருக்கிறார்கள். அவர்களின் புத்திரரும் அதையே புதுப்பித்து அதன்படி நடந்து வந்திருக்கிறார்கள். அவர்களின் பௌத்திரரான மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தியவர்களும் நாளது வரையில் (அதாவது மசோதா சட்டமாவதற்கு முன் வரையில்) நடுநிலைமை வகித்து வந்து திடீரென்று வாக்குறுதியை மீறியதாக அர்த்தம் கொள்ளும்படி பிராமணர்களான நம்மை கோடை இடி கேட்ட நாகம்போல் நடுங்கச் செய்திருக்கிறார்கள். கனம் ராஜப்ரதிநிதி அவர்கள் சம்பந்தப்பட்டவரையில் நடந்த விஷயம் சக்ரவர்த்தி அவர்களுக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை. மதவிஷயங்களில்பிரவேசிப்பதில்லை என்றுநம்முன்னோர்களுக்குக்கொடுத்தவாக்குறுதிக்கு விரோதமாக இந்த மசோதா கொண்டுவர மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்கள் அனுமதி அளிக்ககூடாதென்றும்பிறகு சட்டமாக்கக் கூடாதென்றும் நாலுதிசைகளிலிருந்தும் ஏராளமான மஹஜர்கள் ரிஜிஸ்தர் மூலமாக வண்டிக்கணக்கில் குவிந்துகொண்டிருந்தும் அனேகம் மீட்டிங்குகள் நடத்தி முடிவைத் தெரியப்படுத்தியும் மடாதிபதிகளின் பிரதிநிதிகள் நேரில் போய் பார்த்துக்கதரியும் எல்லாவற்றையும் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல் வீணாக்கி ஒரே நிமிஷத்தில் பாஸ்செய்து 1-4-30 முதல் சட்டம் அமுலுக்கு வரும்படி அனுமதி அளித்துவிட்டார்கள்.

உண்மையில் கவர்மெண்டார் நம்மைக்காப்பாற்ற எண்ணம் கொண்டிருந்தால் ஆரம்பத்திலேயே இந்த மசோதா கொண்டுவா அனுமதியளித்திருக்கக்கூடாது. அநுமதியளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படினும் இந்துமதாசாரியர்களான மடாதிபதிகளை யோசனைகேட்டு அதன்படி நடந்திருக்கவேண்டாமா? மஹர்ஷிகள்

காலத்திற்குப்பிறகு ப்ராம்மணர்களின் ஸகல வைதிககர்மங்களுக்கும் இந்த மடாதிபதிகள் நியந்தாக்களாக இருப்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியாதா? பண்டையகாலத்து ராஜாக்களால் கொடுக்கப்பட்டு நாளது வரையில் நிராக்ஷேபணையாய் அநுபவித்து வரும் இனம் கிராமங்கள், மான்யங்கள் முதலியவைகளையும் சிஷ்யர்களுக்கு மந்த்ரோபதேசம்செய்து அவர்களால் பிரதிவருஷமும் நடக்கும் உபசாரங்களையும் அடைந்து ஸகல பிருதுகளுடன்பிரகாசமாக தேசம் முழுவதும் சஞ்சாரம் செய்துவரும் மடாதிபதிகள் இருப்பது இவர்களுக்கு லக்ஷியமில்லை போலும். அல்லது மசோதா கொண்டுவந்தவர் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பரா. தவிர ப்ராம்மணர்களில் மேல் நாட்டு நாகரீகத்தை அவலம்பிக்கும் சில பிராம்மணர்கள் இந்த மசோதாவுக்கு ஆதரவளிப்பதாய் தோன்றினால் பெரும்பாலான வைதிக பிராம்மணர்களை காப்பாற்றுவதற்கு லீவில் சட்டமாக பாஸ் செய்ய அனுமதியளிக்கக் கூடாதா. இந்த சட்டத்தின் அர்த்தத்தைக் கேட்கும் பொழுது குலை நடுங்குகிறது. சட்டத்தை அனுஷ்டித்தாலும் வைதீகப் பிராமாண்யம் நிர்மூலமாய் போய்விடுகிறது. மீறினாலும் சரீரதண்டனை மூலமாய் நித்யகர்மானுஷ்டானம் போய் பாதித்யம் வந்து விடுகிறது. இது விஷயமாக ஆங்காங்கு மீட்டிங்குகள் கூட்டி பிரசங்கம் புரிந்து வருவதாய் ஆர்யதர்ம பத்திரிகை வாயிலாய் வெளிவருவதைக் காணலாம். गते शोको नकर्तव्यः நடந்த பிறகு துக்கப்படுவது நலமன்று.

விவாஹம் என்பது என்ன ?

வைதீகப்ராமணர்களுள் புருஷர்களுக்கு உபநயனமும் ஸ்திரீகளுக்கு விவாஹமும் முதல் ஸம்ஸ்காரங்களாகும். ஆபஸ்தம்ப ஸ்மிருதியில், अष्टवर्षं ब्राह्मणमुपनीयत எட்டாவது வயதில் உபநயனம் செய்யவேண்டியதென் றும்,

अष्टवर्षा भवेत्कन्या नववर्षा तु रोहिणी ।
दशवर्षा भवेद्गौरी अत ऊर्ध्वं रजस्वला ॥

அதேவயதில் ஸ்திரீக்கு விவாஹம் செய்யவேணுமென் றும் விதித்திருக்கிறது. இதைக் காலவித்யாசத்தாலும் தாரித்திரியத்தினாலும், வரதக்ஷிணையின் கொடுமையாலும், புருஷனுக்கு 14-வயதிற்குள் உபநயனமும் சாஸ்திரத்திற்குப் பயந்து நடுங்கிக்கொண்டே

ருதுவாவதற்குள் ஸ்திரீக்கு விவாஹமும் செய்துவருவது வழக்கமாயிருக்கிறது. தவிர இந்து சாஸ்திரத்தில் தானமென்பது முக்கியம் அதிலும் கன்யகாதானம் ரொம்பசுகிருதமும் மதிப்பும் வாய்ந்தது. இந்து மதம் தவிர எந்தமதத்திலும், தானம் என்பதே கிடையாது. இனும், வெகுமதி என்று சொல்வது அவர்களின் வழக்கம். நெடுங்காலமாக தானம் என்னும் பழக்கமானது ஒருவன் தனக்குச் சொந்தமான சொத்தை வேதோக்தமாக இஷ்டமித்திரர்கள் முன்னிலையில் ஸத்பாத்திரத்திற்கு சக்திக்கு ஏற்றவாறு அலங்காரத்துடனும் திரிகாண சுத்தியாக கொடுப்பதீ என்று பொருள்.

விவாஹகாலத்தில் செய்யப்படும் ஒவ்வொரு சுபசடங்குகள் வேதவாக்கியத்தை உச்சரிக்கவேண்டிய அவச்யமுள்ளது. அந்த காலத்தில் செய்யப்படும் வைதிககாரியங்களானது ரஜஸ்வலையான பெருத்த ஸ்திரீக்கு எந்தவிதத்திலும் சபையில் அருவருப்பைக் கொடுக்கக் கூடியதே. அல்லது அதை நிறுத்திவிடலாமா. நிற்க,

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने ।
पुत्रो रक्षति वृद्धत्वे न स्त्रीस्वातन्त्र्यमर्हति ॥

என்னும் வசனத்தினுல் ருதுவாகும் வரையில் தகப்பனுக்கு கன்யகை சொந்த சொத்தாயிருக்கிறுள். இரண்டுவித காரணத்தாலும் கன்னிகாதானம் பண்ணுவதற்கு காலம் ருதுகாலம் வருவதற்கு முன்னேதானென்று ஸ்பஷ்டமாகிறது. ருதுவானவுடன் ஸ்திரீ ஸ்வதந்தரத்தை அடைந்துவிடுகிறுள். அப்படிப்பட்ட ஸ்திரீயை தானம் பண்ண அதிகாரம் உண்டா. தகப்பனுக்கு இஷ்டமிருக்கும் புருஷனிடத்தில் இவளுக்குப் பிரியம் உண்டாகுமா. ருதுமதி விவாஹத்தில்இந்துசாஸ்திரபலன்கிடைக்குமா. அல்லதுமேல்நாட்டு நாகரீகப்படி இனும் வெகுமதிபோல் கொடுத்து விட்டால் வைதிக விவாஹ ஸம்ஸ்காரம் அவசியமே இல்லே. இது நம்முடைய மதத்தை எவ்வளவு தூரம் பாதிக்குமென்பதை இம்மசோதாவுக்குஆதரவளித்த பிராம்மண ப்ரபுக்களே யோசித்துப்பார்க்கலாம். இதன் பிறகு சில மெம்பர்கள் சம்போகமசோதா, ஆகாரநியம மசோதா சிகைமசோதா இன்னும் விசித்திரமான மசோதாக்களேக்கொண்டு வரப் போவதாய் கேழ்வைப்படுகிறோம். இது எந்தமட்டில் உண்மையோ தெரியவில்லே. வீணுய் எழுதிக்கொண்டு போவதில் யாது பயன்.

இந்த மசோதாவுக்காக நாம் செய்யவேண்டிய கடமை மூன்றேயாகும். மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்களிடம் நேரில் பிரதிநிதிகளை அனுப்பி நம்முடைய குறையை எடுத்துரைத்து இம் மசோதா அனுஷ்டானத்துக்குவாராமல் செய்துகொள்வதொன்று. இதுவிஷயத்தில் வாக்குரிமை, அர்த்தபுஷ்டி முதலிய உபகரணங்கள் ஒன்றுமில்லாத நமக்கு உபகாரம் நம்முடைய மடாதிபதிகள்தான் செய்யும்படி அவர்களை நாம் கேட்டுக்கொள்ளவேண்டும். மேலும் தூரதேசம் கிராமந்தவாராமல் பிரசாரகர்கள் சென்று சட்டத்தின் அம்சத்தை எடுத்துரைத்து ஆங்காங்கு மீட்டிங்கு கூட்டி பிரசங்கம் செய்து இம்மசோதா ஒழியும் வரையில் பிரயாசைப்பட்டு முடிவை உடனுக்குடன் பத்திரிகைகளில் வரையவேண்டும். இது விஷயமாய் மதுரை காலேஜ் பண்டிட் M. N. சுப்பிரமணியசாஸ்திரிகள், ஸ்ரீமத் சங்காராசாரியஸ்வாமிகள் ஜகத்குரு ஆஸ்தான பண்டிதர் ஸ்ரீவத்ஸ. ஸோமதேவசர்மா முதலிய இன்னும் அநேக மஹான்கள் விசேஷபிரசாரம் செய்து பிரயாசைப் பட்டுவருகிறார்கள். இது இரண்டாவது. இதற்கு பத்திரிகை சொந்தமாகவேண்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தாராளமாய் உலாவிவரும் சுதேசபத்திரிகை இங்கிலீஷில் ஹிந்துவும், தமிழில் சுதேசமித்திரனும். இதன் சொந்தக்காரர்கள் இந்த மசோதாவுக்கு ஆதாவாயிருப்பதால் நம்முடைய கண்டனவிஷயத்தைத்தாராளமாய் வெளிப்படுத்த இஷ்டப்படுவதில்லையென்றும் கேள்விப்படுகிறோம். நம்முடைய குறைகளை ராஜாங்கத்தாருக்கு எடுத்துரைத்து இம்மசோதாவை ஒழிக்கவேண்டுமானால் ஸர்க்கார் அனுமதிபெற்று, தமிழிலும் இங்கிலீஷிலுமாக தினப்பிரதி பத்திரிகைகள் இரண்டும் ஆரம்பிக்கவேண்டும். அப்படிஏற்படுத்துவதற்கு பெருந்தொகை வேண்டும். ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்வாமிகளும், ஸ்ரீவானமாமலை ஜீயர், ஸ்ரீ அஹோபில ஜீயர்ஸ்வாமிகளும் விசேஷ திரவ்யஸகாயம் செய்யப்போவதாய் வாக்களித்திருப்பதாக கேள்விப்பட்டு ஸந்தோஷிக்கிறோம். ஆகையால் நாமும் நம்மால் கூடிய திரவியஸகாயம்செய்தும், ஆங்காங்கு பிரஸங்கம்செய்து சந்தா வசூல்செய்தும், அதிசீக்கிரம் பத்திரிகை ஆரம்பிக்க முயற்சிசெய்யவேண்டியதவசியம். நம்முடைய ஸ்மிருதி ஒவ்வொன்றிலும் ஆபத்தருமம் என்று ஒரு விதி இருக்கிறது.

அது மூன்றாவதான நம்முடைய கடமையாகும். நாம் வைதிக தர்மத்தை வழக்கம்போல்செய்து அதன் பயனாக தண்டனை நேர்ந்தால் ராஜாங்கத்துக்குக் கட்டுப்பட்டு அனுபவிக்கவேண்டியதே தவிர, முட்டுத்தனம் ஒன்றும் செய்யக்கூடாது. அதனால் எவ்வித பாதித்யமும் வராது என்பது ஸ்ரீமதாசாரியாளின் அபிப்பிராயம் என்று தெரிகிறது. சாஸ்திரஸம்மதமும் அப்படியேயிருக்கிறது. இதைத்தவிர வேறு வழி கிடையாது. ஆகையால் ஸகல ஆஸ்திக வைதிகர்களையும், சந்தாதாரர்களை ஏராளமாய்ச் சேர்த்து பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்தும்படியான ஏற்பாட்டைச் செய்யவேணுமாய் மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். சுபம். தி. ந. தாததேசிகாசாரியார்,

கம்மாபுரம்.

மலர்கள்.

(685-வது பக்கத்தொடர்ச்சி.)

नाक्षतैरर्चयेद्विष्णुं न तुलस्या विनायकम् ।
न दूर्वयार्चयेद्दुर्गां न केतक्या सदाशिवम् ॥

விஷ்ணுவை அக்ஷதைகளாலும், விநாயகரைத் துளஸியாலும், துர்க்கையை அருகம்புல்லினாலும், சிவனை தாழம்பூவினாலும் அர்ச்சிக்கக் கூடாது.

अक्षतानर्कधुत्तूरौ विष्णो र्नैवार्चयेत्सुधीः ।

அக்ஷதைகள், எருக்கு, ஊமத்தை முதலிய பூக்களிவைகளை அறிவிற் சிறந்தோர் விஷ்ணுவின் வழிபாட்டிற்கு உபயோகிப்பது தகாது. அக்ஷதையை ஸாலக்ரம அர்ச்சனையில் மாத்திரம் விலக்கவேணுமேயல்லாது மூர்த்தி பூஜைகளில் தாராளமாகஉபயோகிக்கலாமென ஹேமாத்ரி கூறியுள்ளார்.

पाटलाच शमीपत्रं दुर्गायास्तु हिताहितम् ।
अगस्तिरतिमुक्तश्च तिरीटश्च हरे हरौ ॥
अपामार्गस्य पुष्पञ्च दुर्गायाश्च हिताहितम् ।

பாதிரிப்புஷ்பம், வன்னித்தழை அவைகள் விதிக்கப்பட்டிருப்பினும் துர்க்கைக்கு விலக்கத்தக்கதே. அவுத்திப்பூ, அதிமுக்தம், வெள்ளலொத்திப்பூ, இவைகள் விஷ்ணுவினுடையவும், சிவனுடையவும், நாயுருவிப்பூ துர்க்கையினுடையவும் ஆராதனைக்கு விதிக்கப்பட்டிருப்பினும் விலக்கத்தக்கதே.

तिलकं मालतीवाणस्तुलसी भृङ्गराजकम् ।
तमालं शिवदुर्गार्थे निषिद्ध विहितं भवेत् ॥
जय:काश:श्वेतपद्मं श्वेतमन्दारकं तथा ।
दुर्गायाश्चैव विष्णोश्च निषिद्धविहितं भवेत् ॥

மஞ்சாடி, மாலதி, கருங்குரிஞ்சி, துளஸீ, கையாந்தாரை, அடப்பமரம் இவைகளின் பூக்கள் விலக்கப்பட்டிருப்பினும் சிவன், துர்க்கை இவர்களுடைய பூஜைகளுக்குறியவைகளே. தழுதாழை, நாணல், வெண்டாமரை, வெண்மந்தாரை இவைகளின் பூக்கள் விலக்கப்பட்டிருப்பினும் துர்க்கையினுடையவும், விஷ்ணுவினுடையவும் ஆராதனைக்கேற்றவைகளேயாம்.

மலர்களுக்கு காலஅளவும் பர்யுஷிததோஷமும்.

बिल्वापामार्गजाती तुलसिशमिशताकेतकी भृङ्गदूर्वा
मन्दाम्भोजाह्रिदर्भा मुनितिलतगर ब्रह्मकल्हारवल्ली ।
चम्पाश्वारातिकुम्भी दमनमरुवका बिल्वतोऽहानिशस्ता
त्रिंशत्र्येकार्धरीशोदधिनिधिवसुभूभूयसाभूयएवम् ॥

(बोधेन्द्रः)

பில்வம், அருகம்புல், பூவரசு இவைகள் முப்பதுநாட்கள்வரைக்கும் நாயுருவி, குருக்கத்தி, செங்கழுநீர்பூக்கள் மூன்றுதினங்கள்வரைக்கும்; ஜாதி, தாமரைமலர், மல்லிகை இவைகள் ஒண்ணரைநாட்கள் வரைக்கும்; துளஸீ, நாகஸேராம், சம்பகம் பதினேருநாட்கள்முடியவும்; வன்னித்தழை, தர்ப்பம், செவ்வலரி இவைகள் நான்கு நாட்கள்வரைக்கும்,

தண்ணீர்முட்டான், அகத்தி, பதிரிப்பூ முதலியன ஒன்பது தினங்கள்வரைக்கும்; தாழை, எள்ளு, தமனம் முதலான பூக்கள் எட்டு தினங்களும்; கையாந்தாரை, தகரம்,கிடாரை முதலியனவும் ஒரேதினம் முடியும்வரைக்குமே 'பழமையானது' (பர்யுஷிதம்) என்ற தோஷத்திற்கு உள்படா.

पङ्कजं दशरात्रं स्यात् दशरात्रन्तु बिल्वकम् ।
तुळस्येकादशाहन्तु पुनः प्रक्षाल्य पूजयेत् ॥ (हेमाद्रिः)

पद्मानिसितरक्तानि कुमुदान्युत्पलानिच ।
एषां पर्युषिताशङ्का कार्या पञ्चदिनोत्तरम् ॥ (भविष्यत्पुराणं)

प्रहरं तिष्ठते जाजी प्रहरार्धन्तु मल्लिका ।
त्रियामं मुनिपुष्पञ्च करवीरमहर्निशम् ॥

'தாமரை மலர்களையும் பில்வங்களையும் பத்துதினங்களும், துளஸியை பதினொருதினங்களும், பின்னொருமுறை ப்ரோக்ஷணைசெய்து அர்ச்சிக்க உபயோகிக்கலாம்.'

"செந்தாமரைகள், வெண்டாமரைகள், செங்கழுநீர்ப்பூக்கள், செய்தற்பூக்கள் இவைகளைப்பற்றி ஐந்துதினங்களுக்குமேல் பழைய மலர்கள் என்று சந்தேகப்படவேண்டும்." அதுவரையிற்றடையின்றி உபயோகிக்கலாம்.

"ஜாஜீ என்னும் மலர் ஒருநாழிகையளவும், மல்லிகா அரைநாழிகைநேரமும், அகத்திப்பூ மூன்றுயாமமளவும், செவ்வலரி ஓர் பகலிரவுமுழுவதும் உபயோகிக்கத்தக்கவைகளாம்."

இங்கு காலஅளவைக்குறித்துக் காட்டிய செய்யுள்களில் ஒரே புஷ்பத்தைக்குறித்துப் பல கொள்கைகள் இருப்பின் அவைகள் ஒவ்வோர் மஹரிஷியின் கொள்கையையொட்டி மாறுபடுகிறது. இதற்குக் காரணம் இருவகையிற் கூறலாம். ஒரேமலர்களின் பல்வேறுஜாதி வேறுபாட்டை மனதிற்கொண்டு கூறியிருக்கக்கூடும், அல்லது தேசபேதத்தை மனதிற்கொண்டும் சொல்லியிருக்கலாம். உதாரணமாக சில மல்லிகைகள் வெகுசீக்கிரமாகவாடிவிடுகின்றன. சில வகைகள் இரண்டுதினங்களளவும் வதங்குவதில்லை. அம்மாதிரியே ஒரே புஷ்பம் உஷ்ணமதிகமாயுள்ள தேயங்களில் வெகுசீக்கிரம் உலர்ந்துபோம். அதுவே குளிர்ந்த தேசங்களில் சில தினங்கள்கூட வதங்காமலிருக்கும். ஆதலால் இவ்வாறான காரணங்கள்பற்றியே மகரிஷிகளின் கொள்கைகள் சிறிது பேதித்திருக்கின்றனஎனக்கொள்வதுமிக்கப்பொருத்தமுடைத்து.

பர்யுஷிதமென்ற தோஷமற்றவைகள்.

नपर्युषितदोषोस्ति जलजोत्पलचम्पके ।

तुलस्यगस्त्य वकुले बिल्वे गङ्गाजले तथा ॥
तुलस्यगस्त्य बिल्वानां नच पर्युषितात्मता । (भविष्यत्पुराणं)

தாமரை, சம்பகம், துளஸீ, அகத்தி, மகிழம்பூ, பில்வதளங்கள், கங்கைநீர் இவைகளுக்குப் பழமையென்ற தோஷமே கிடையாது.

बिल्वपत्रञ्च माध्यञ्च तमालामलकीदलम् ।
कल्हारतुलसीञ्चैव पद्मञ्च मुनिपुष्पकम् ॥
एतत्पर्युषितं नस्याद्यच्चान्यत्कलिकात्मकम् । (योगिनीतन्त्रम्)
तुलस्यां बिल्वपत्रेच जलजेषुच सर्वतः ।
नपर्युषितदोषोस्ति मालाकारगृहेषुच ॥

பில்வதளங்கள், அடைப்பம்பூ, நெல்லித்தழை, செங்கழுநீர்ப்பூ, துளஸீ, தாமரை, அகத்திப்பூ மொட்டாகவுள்ள மற்றும் சில பூக்கள் இவைகளுக்குப் பழமையென்ற குற்றமேயில்லை. அவ்வாறே தோட்டக்காரன் வீட்டில் முதல்நாள் பறித்துவைக்கப்பட்டிருப்பினும் அவ்வாறான தோஷமில்லை.

यद्यापर्युषितैश्चापि पुष्पाद्यैरविकारिभिः ।
गन्धोदकेन चैतानि त्रिः प्रोक्ष्यैव प्रपूजयेत् ॥
अथवा बिल्वतुलसीपत्रैर्वकुलपुष्पकैः ।
शुष्कैरपिच पूजयेत् ... ... ॥

ஒன்றும் கிடைக்காவிடின் பர்யுஷிதமான பூக்களுள் மிக்க மாறுதல்கள் அடையாதவைகளை சந்தணநீரினால் மும்முறை புரோக்ஷித்து அவைகளாலும், பில்வம், துளஸீ, மகிழம்பூ முதலியன காய்ந்திருப்பினுமவைகளாலும் பூஜைசெய்யலாம்.

(2) மத்திமம்.

जंवू दाडिम जम्बीर चिञ्चिणी बीजपूरकाः ।
रम्भा धात्रीच बदरी रसालः पनसोपिच ॥
एषां फलैर्यजेद्देवं ... ... ।

நாகை, மாதுளை, எலுமிச்சை, புளி, கொய்யா(?), வாழை, நெல்லி, எலந்தை, மா, பலா இவைகளின் பழங்களால் தேவதைகளை அர்ச்சிக்கக்கூடும்.

(3) அதமம்.

तुलसी वकुलोवृक्षः चम्पकश्च सरोजिनी ।
बिल्वकल्हारदमनाः तथा मरुवकः कुशः ॥
दूर्वा हि वल्यपामार्गा विष्णुक्रान्तो मुनिद्रुमः ।
धात्रीयुतानामेतेषां पत्रैः कुर्यात्सुरार्चनम् ॥

துளஸீ, மாமரம், சம்பகம், தாமரை, பில்வம், செங்கழுநீர், தமனம், மிடானை, தர்பம், அருகம்புல், நாககேஸரம், நாயுருவி, விஷ்ணுக் கிரந்தை, அகத்தி, நெல்லி முதலிய மரஞ்செடிகொடிகளின் இலை களாலும் தேவதைகளுக்கர்ச்சனை புரியலாம்.

पुष्पं वा यदिवापत्रं फलं नेष्टमधोमुखम् ।
पुष्पाञ्जलिविधिं हित्वा यथोत्पन्नं तथार्पणम् ॥

மலர்களையோ, இலைகளையோ, பழங்களையோ அர்ச்சிக்குங்கால் புஷ்பாஞ்சலிவிதியை விடுத்து மூர்த்திகளின் தலையின்மீது கீழ் நோக்கிப்போடக்கூடாது. அவைகள் எவ்வாறு உண்டாகின்றன வோ அவ்வாறே (மேல்நோக்கியே) அர்ப்பணஞ்செய்யவேண்டும்.

முடிவுரை.

पुष्पाभावेपि देयानि पत्राणिच जनार्दने ।
पत्राभावे जलं दद्यात्तेनपुण्यमवाप्यते ॥
देवीपूजासदाकार्या जलजैःस्थलजैरपि ।
विहितैर्वा निषिद्धैर्वा भक्तियुक्तेन चेतसा ॥
सर्वपुष्पैस्सदा पूजा विहिताविहितैरपि ।
कर्तव्या सर्वदेवानां भक्तिरेवात्रकारणम् ॥

'புஷ்பங்களில்லாவிடில் இலைகளையும், அவைகளுமின்றேல் சுத்த தீர்த்தத்தையும் பகவானுக்கு அர்ப்பணஞ்செய்தாலேயே புண்யம் பெறுவான்.'

'சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருப்பினும் அல்லது விலக்கப்பட் டிருப்பினும் நீரிலும் நிலத்திலும்உற்பத்தியான மலர்களால் பக்தி யுடன் தேவியை என்றுமாராதிக்கவேண்டும்.'

எடுத்திருப்பினும் தடுத்திருப்பினும் எம்மலராலும் எப்பொழுதும் எத்தேவதைக்கும் பூஜைசெய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் பக்தியே மூலகாரணம்.

ஆதலால் பக்தியே மூலகாரணமாகையால் அதனையே கைக்கொண்டு என்றும் மாறாத அன்புடன் 'एको देवः केशवो वा शिवो वा' என்ற முதுமொழியையொட்டி யாதாவதோர் ஸகுணமூர்த்தியை வழிபடுவோமாயின் முடிவில் முக்திபெறுவோம் என்பதற்கையமில்லை.

நமது பண்டைகாலத்து முன்னோர்களின் ஆசாரங்களெல்லா மலைகடற்றுண்டி அலறியோடியொளியும் இந்நாளில் முற்றும் கைவிடமுடியாது. தொட்டுந் தொடாததுமாக அனுட்டித்துவருகின்ற ஸரஸ்வதிபூஜை முதலிய சில விருததினங்களிலாவது மலர்களைக் கையிலேந்தி தேவதையையர்ச்சிக்கும் நிர்ப்பந்தம் ஆர்யர்களென்னும் பலரையும் இன்னும் முற்றும் விட்டபாடில்லை. நிற்க சாஸ்திரங்களிற் தேர்ச்சிபெறாது மூடபக்திவாய்ந்த வெகு சிலர் தேவதைகளை வழிபடுவதில் விருப்புற்றவர்களாக இருக்கின்றனர். அவ்வாறான ஆர்யநண்பர்களுக்கு உதவிபுரியுமாறு என்னுடைய கல்வியறிவிற்கேற்ப என் சிற்றறிவிற்கு எட்டியவாறு பூசைக்குரிய மலர்களைப்பற்றி ஆங்காங்கு ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும், மந்திரசாஸ்திரங்களிலும் கூறியுள்ள பிரமாணவாக்கியங்களையொருங்கே திரட்டி, அதனைப் பாகுபாடு செய்துகொண்டு, நன்கு விளங்கச்செய்திருக்கிறேன். பிரமாணவாக்கியங்கள் எல்லோருக்குந் தெரியவேண்டுமென்ற எண்ணத்தால் ஒன்றையும் ஸ்வதந்திரமாகக் கூறாது மொழிபெயர்ப்பாகவே எழுதியுள்ளேன். இந்த என் கட்டுரையுள் குற்றங்குறைகள் இருப்பின் அதனையன் பார்ந்த நண்பர்கள் என்பேரில் தயைகூர்ந்து மன்னித்து 'ஹம்ஸக்ஷீரநியாயமாக' குற்றத்தை நீக்கி குணத்தை கிரஹிக்குமாறு வேண்டுகிறேன்.

N. வைத்யநாதசாஸ்திரி.

அத்தியாவசியம்.

மானிடர்கள் செய்துமுடிக்கவேண்டிய காரியங்கள் அத்தியாவசியம், ஆவசியம் அநவசியமென மூன்றுவகை பேதமுள்ளதாகும். இதால் தாமதமின்றி செய்யவேண்டியது அத்யாவசியமென்றும், சிறிது தாமதித்தாவது செய்யவேண்டியது ஆவசியமென்றும், தாமதித்துசெய்யக்கூடாததும்அநவசியமென்றும்

பொருளாம். நாமிதில் அத்யாவசியத்தைச் செய்யவேண்டிய காலம் வந்துகூடியிருக்கிறது. அஃது யாதெனில் "சாரதா பில்" விஷயமான தீவிரமுயற்சியே இச்சமயம் அத்தியாவ்சிய காரியமாம். முயற்சிக்கு மிகச்சக்தியுண்டு. இச்சக்தி அப்பியாஸ விசேஷத்தால் வரவேண்டும். இதை அர்ஜுனனுக்கு பகவான் கீதையில் அர்ஜுனா! மனதை அடக்குவது கஷ்டமாகிலும்

"अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते"

தீவிரமான அப்பியாஸவிசேஷத்தால் அடக்கவேண்டுமென்று உபதேசிக்கிறார். ஆகையால் நாம் எப்பொழுது முயற்சியைப் பெற்றிருப்பதாக நினைக்கவேண்டும். முயற்சியினாலேயே எல்லாமுண்டாகிறது. நாமே நம்முடைய முயற்சியிலேயே இந்திர,சந்திர,பிரம்மாவாகலாம்.

நஹுஷராஜன் 100 அசுவமேதயாகம்செய்து இந்திரனானன்.

முயற்சியின் சக்தியால் அனுமான் பிரும்மபட்டத்துள்ளானன். முயற்சியின் சகாயத்தால் எதையும் பெறலாம். சதாசாரம், பக்தி, விசுவாசம் இவைகளைக் கடைப்பிடித்து முயற்சி செய்தால் கிடைக்காதது எதுவுமில்லை. முயற்சியில் ஈசன் அருள் பொருந்தியிருக்கிறது.

இவ்விதம் நாம் முயற்சிக்கும் ஒவ்வொரு காரியத்திலும் ஓர் திருப்திபெறும்வரையில் முயற்சியை விடக்கூடாது. திருப்தி என்பது மனிதனுக்குச் சிறந்த பூஷணமாம். ஆனால் அல்ப இஷ்டபூர்த்திகளில் திருப்தி கொண்டுவிடக்கூடாது.

தற்காலம் "விவாஹ பில்" விஷயமாக நாம் இனி என்ன செய்யக்கூடும்?

வந்தது வந்தாச்சுது என்று எண்ணவேண்டாம். மனிதன் நினைத்தபடி ஒன்றும் நடைபெறுவதில்லை.

"अन्यथा चिन्तितं कार्यं दैवमन्यत्र चिन्तयेत्"

என்றபடி தெய்வம் நினைத்தபடியே நடைபெறும். பாஸான இந்த பில் தள்ளும்படியாயும் வாலாம். சிறிது தளர்த்தும்படியாயும் வாலாம். அல்லது நடைபெறுமலும் வாலாம. பாஸான சட்டங்கள் யாவும் நடைபெற்றே வருகிறதென்றுசொல்வதற்கில்லை. இத்தருணத்தில் நாம் தீவிரமுயற்சி செய்யவேண்டும். அதனறி மௌனமாகவிருக்கக்கூடாது. "மௌனம் ஸம்மதத்தைக் காட்டும் குறியாம்". அலம்புத்தியாகவிருந்தால் திருப்திப்பட்டுவிட்டதாகத் தீர்மானித்துவிடுவார்கள். (தொடரும்)

K.S. சங்கராராமசாஸ்திரி